நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 13 செவ்வாய்க்கிழமை (27 06 2000) VALAMPURI ஒலி: 190

★ பருத்தித்துறை கடற்பிரதேசத்தில்

# "உகன" கப்பல் கரும்புலிகளின் தாக்குதலில் தீப்பற்றிக் கொண்டது

## 7 பேரைக் காணவில்லை 21 பேர் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

**கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிவந்த "மேர்ச் உகன" என்ற கப்பல் பருத்தித்துறைக் கடற்பிரதேசத்தில் இருந்து ஐம்பத்தைந்து கடல்மைல் தூரத்தில் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி தீப்பற்றி எரிந்ததாகவும், கப்பலில் இருந்த சிப்பந்திகள் 7பேரைக் காணவில்லை என்றும், 21பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் அரசதரப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது.**

**இதேவேளை இலங்கை இராணுவத்திற்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பலையே கடற் கரும்புலிகள் தாக்கி அழித்ததாக விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று அதிகாலை 2.30 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து 55 கடல்மைல் தொலைவில் கடற் கரும்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 'மேர்ச் உகன' என்னும் கப்பல் தீப்பற்றி எரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேர்க்கண்டைல் சிப்பிங் கம்பனிக்குச் சொந்தமான இந்தக் கப்பலில் தனியார் வர்த்தகர்களுக்கு சுமார் இருபது கோடி ரூபா பெறுமதியான 2850 மெற்றிக் தொன் பொருட்கள் ஏற்றி வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆக கப்பலில் இருந்த கப்பல் சிப்பந்திகளில் 7 பேரைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலின் பெறுமதி 50 கோடி ரூபா

பருத்தித்துறை துறைமுகத்திற்கு அப்பால் முனைக் கடற் பிரதேசத்திற்கு அண்மையில் கடற் கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்கான கப்பலின் பெறுமதி 50 கோடி ரூபா என்று மேர்க்கன்டையில் சிப்பிங் கொம்பனி தலைவர் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

(8ம் பக்கம் பார்க்க)

## இரத்ததானம் வழங்கவும்

சத்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

யாழ். பிரதேச செயலர் பிரிவில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் காலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும். (ச)

# உணவுப் பொருளுக்கு தட்டுப்பாடு இல்லை

### யாழ். செயலகம் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதியளவு அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி வகைகள் மற்றும் பால்மா சவர்க்காரவகைகள் போதியளவு கையிருப்பில் இருப்பதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாக சபைக்கு 73 அங்கத்தவர்களை நியமிக்க முடிவு

### அரசு - ஐ.தே.க. இணக்கம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபையில் 73 அங்கத்தவர்களை நியமனம் செய்வதில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணங்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ரணில் விக்கிரம

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி - ஈ.பி.டி.பி சந்திப்பு யாழ். நிலவரம் ஆராயப்பட்டது

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஈ.பி.டி.பியினர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து விரிவாக எடுத்துக்கூறினர்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஈ.பி.டி.பியின் சார்பில் அதன் செயலாளர் நாயகமும்பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இரத்மலானைக் குண்டுத்தாக்குதல்

## முக்கிய சூத்திரதாரியை கைது செய்ய விசேட பொலிஸ் பிரிவு அமைப்பு

[கொழும்பு]

இரத்மலானைக் குண்டு வெடிப்புச்சம்பவத்தில் கொல்லப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரான சி.வி. குணரட்னவின் கொலை தொடர்பாக ஒருபெண் உட்பட சுமார் 40பேர் வரை கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டே இந்த 40

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் அடிக்கடி சுற்றி வளைப்பு

(கொழும்பு)

கொழும்பை அண்டிய கல்கிசைப் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார் 45தமிழர்களைக் கைது செய்து விசாரணை நடத்தியதுடன் அவர்களில் 7 பேரை தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் இச்சுற்றி வளைப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் தற்கொலைத் தாக்குதலில் அமைச்சர் சி. வி. குணரெட்ன கொல்லப்பட்டதிலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# செய்மதி மூலத் தொடர்பு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செய்மதி மூலமான தொலைதொடர்பு நாளை ஆரம்பிக்கப்படவிருப்பதாக கொழும்பில் இருந்து யாழ். வந்துள்ள ரெலிக்கொம் உயர்அதிகாரி ஒருவர் நேற்று 'வலம்புரி' க்குத் தெரிவித்தார்.

அவ்வதிகாரி மேலும் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு ''சிற்றி ஓவ் றிங்கோ'' கப்பல் நாளை புறப்படுமென யாழ். சிவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில பயணம் செய்வதற்கு பயண அனுமதியை பெற்றவர்கள் நாளை 28ஆம் திகதி (புதன்கிழமை) காலை 8மணிக்கு பயண ஆவணங்களுடன் யாழ். புகையிரத நிலையத்தில் சமூகமளிக்குமாறு சிவில் நிர்வாகம் கேட்டுள்ளது. (ந-4)

# சண்டேலீடர் மீதான தடை நான்கு மாதங்களால் குறைப்பு

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகை நிறுவனத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை ஆறு மாதத்திலிருந்து நான்கு மாதங்களால் குறைக்குமாறு ஜனாதிபதிதகுதிவாய்ந்த அதிகாரிக்கு பணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட தடையினை மறுபரிசீலனை செய்யும்படி லீடர் நிறுவன உரிமையாளர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிடம் கேட்டிருந்தார்.

இதன் பிரகாரம் இந்தத் தடையை 4 மாதங்களால் குறைக்கும்படி ஜனாதிபதி உத்தரவு விடுத்துள்ளார். (ச-வ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### முன்பள்ளி பாலர் ஆசிரியராகப்பயிற்சி

தபால் வழியில் ஆறுமாதப் பயிற்சி கடைசித்தமைகள் சு பொ. த [சாதாரணம்] பாலர் ஆசிரியர்சங்கம் கொக்குவில் [1120]

### ராசிகளின் பலாபலன்கள்

V. A. சிவராசா வேலணை சோதிடர் வெளியிட்ட வியாழ சனீஸ்வர ராகு-கேது மாற்ற பலாபலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. உங்கள் எதிர் காலம் பற்றிச் சிந்திக்கும் வேளையில் 152B, அரசடி வீதி கந்தர்மட முகவரியில் சந்திக்கலாம். (1271)

### தவறிவிட்டது

கண்டி வீதி, மீசாலை மேற்கை நிரந்தர வதியுமிடமாகக் கொண்ட தங்கராசா காவேரி என்பவருடைய 091034122 இலக்கமுடைய அறிமுக அட்டையைக் கண்டெடுப்பவர் தயவுசெய்து மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் ஒப்படைக்கும்படி நன்றியுடன் வேண்டுகின்றேன். (1270)

### விற்பனைக்கு

30 நாள் நிரம்பிய கறுப்பு இனம் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. புதன்கிழமை பார்வையிடவும். முகவரி: ம. மார்க்கண்டு. M. S லேன், கோண்டாவில் கிழக்கு கோண்டாவில். (1208)

### கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

70/1 பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை என்ற முகவரியில் வசிக்கும் முருகையா துஷ்யந்தி என்பவரது விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் இலங்கை

### தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2000/2001

யாழ்ப்பாண பல்கலைக் கழக தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி 2000/2001 புதிய அனுமதியில் தெரிவானோரின் பெயர்ப் பட்டியலை தொழிலாளர் கல்வி அலகு, யாழ். பல்கலைக் கழக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். தெரிவு செய்யப்பட்டவர்களுக்குரிய அனுமதிக் கடிதம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவற்றின் பதிவுகள் 2000.06.22 ஆம் திகதி நடைபெறும்.

குறிப்பு:-
தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கைநெறி மற்றும் தொழிலாளர் கல்விச்சான்றிதழ் கற்கை நெறியின் இரண்டாம் அரையாண்டு வகுப்புகள் 2000.07.01 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பதிவாளர்

(சி-575)

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

எமது நிறுவனத்தினால் நடத்தப்பட்ட சகல பயிற்சி வகுப்புகளும் வழமைபோல் நடைபெறுகின்றன. மாணவர்களை காரியாலயத்தில் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

J. T. I. நிர்வாகி
யாழ்ப்பாணம். [1311]

### மலிவுவிலைக்கு பழுப்புநிற சீனி விற்பனை

(தென்மராட்சி)

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற பழுப்பு நிற சீனி தேநீர் பாவனைக்கு உகந்ததாக இல்லாமல் இருப்பதால் அவை கடைகளில் மலிவு விலைக்கு விற்கப்பட்டுவருகின்றது.

அதேபோல ஹைலன்ட்பால் மா பைக்கற்றையும் பெரும்பாலான குடும்பங்களில் மலிவு விலையில் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பேக்கரிகளில் விற்பனை செய்வதாகவும் அறியவருகிறது. (சி-77)

### சீட்டிழுப்பு முடிவு

25-06-2000 ஞாயிற்றுக்கிழமை சங்கானை ப. நோ. கூ. சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பின் அதிஷ்ட இலக்கங்கள்.

1 ம் பரிசுக்கு உரிய சீட்டிலக்கம் — 0536
2 ம் பரிசுக்கு உரிய சீட்டிலக்கம் — 3677
3 ம் பரிசுக்கு உரிய சீட்டிலக்கம் — 3646

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

3390, 3441, 0480, 0390, 1000, 1899, 3374, 4995, 3946, 0893

குறிப்பு:-
பரிசுப் பொருட்களை எதிர்வரும் 15.07.2000 சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும். அதன் பின்பு வழங்கப்படமாட்டாது.

(1301) தலைவர்

### அறிவித்தல்

நவீல்ட் பாடசாலை சகல ஆசிரியர்கள், ஊழியர்கள் யாவரும் வியாழக்கிழமை (29.6.2000) காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டையில் வந்து அதிபரைச் சந்திக்கவும்.

அதிபர்

(1296)


## கண்ணீர் அஞ்சலி

கொழும்பைச்சேர்ந்த திரு. கந்தையா துரைசிங்கம் 24.06.2000 அன்று அகாலமரணமானார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அன்னாரை இழந்துதவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல்
திருமதி இராஜேஸ்வரி லோகேஸ்வரன் (சகோதரி)
நீர்வேலிதெற்கு, நீர்வேலி.

(1299)

## கண்ணீர் அஞ்சலி

### சிவகுரு நாகரத்தினம்

வைத்திய கலாநிதி நா. விமலகாந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார் சிவகுரு நாகரத்தினம் அவரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். வைத்தியசாலை
பங்காளர்கள், தாதிகள்,
வைத்தியர்கள், ஊழியர்கள்.

[1304]

## கண்ணீர் அஞ்சலி

எமது சகஉத்தியோகத்தர்

### அமரர் தம்பி சிவேஸ்வரத்தம்பி

(B. A. Hons)

(உள் நாட்டு வியாபாரத்திணைக்களம்)

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உள்நாட்டு வியாபாரத் திணைக்களம்
கச்சேரி
யாழ்ப்பாணம்

(1313)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் இரங்கல் திருப்பலியும்

அமரர்

### அருட்தந்தை மைக்கல் சவிரிமுத்து

அமரர் அருட்தந்தை மைக்கல் சவிரிமுத்து அ. ம. தி. அடிகளாரின் 31-வது நாள் நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் புதன்கிழமை [28-06-2000] காலை 7.30 மணிக்கு குளமங்கால புனித சவேரியார் ஆலயத்தில் அவரது ஆன்ம சாந்திக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இத்திருப்பலியில் கலந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு விசுவாசிகளையும் அருட்தந்தையர்கள், அருட்செல்விகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(1291) மருமக்கள், உறவினர்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மோகனா சுந்தரமூர்த்தி

அமரத்துவம் அடைந்த திருமதி மோகனா சுந்தரமூர்த்தி அவர்கள் (அளவெட்டி) எங்கள் துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் முன்னைநாள் நிர்வாக சபை உறுப்பினரும், அளவெட்டி வெள்ளியம்பதியைப் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி மோகனா அவர்கள் 26-06-2000 திங்கட்கிழமை மாலை 5-30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இல்லத்தில் சிவபதமடைந்துவிட்டார் என்பதை சோகத்துடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

[சி-576]

## மரண அறிவித்தல்கள்

### சீனியர் தங்கராசா

(கட்டுவன் சைவமடத்தடி)

கட்டுவன் சைவமடத்தடியைச் சேர்ந்த சீனியர் தங்கராசா கடந்த 14-06-2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் தெய்வானையின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னமமா, கனகதிப்பிள்ளை, புஸ்பராணி, பவா, பேபி, சரோ, ரவி, உமா, சற்குணபாலன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற பொன்னம்மா, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற இராசம்மா, இல்லையம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஊரெழு கிழக்கு, சி. கணபதிப்பிள்ளை
பலாலிவீதி, சுன்னாகம். (சகோதரன்) (1303)

### திருமதி மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி அமலோற்பவநாயகி ஜெயநாதன் அவர்கள் 22 ஆம் திகதி கொழும்பில் காலமானார்.

அன்னார் ம. ஜெயநாதன் (அதிபர், முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், இளஞ்செழியன், இளஞ்சோழன், இளஞ்சேந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், மரியாம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், அருமைநாயகம், மேரிராணி, குலநாயகம், தனிநாயகம், மேரிநிர்மலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பா, காலஞ்சென்ற ஜெயராஜா, தேவஜோதி சுசிலா, அருச்சுனா, லீலா, குலம், புசி, அமரன், பேபி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26 ஆம் திகதி (திங்கட்கிழமை) கொழும்பில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மருதடியகாடு, வல்வெட்டித்துறை. அ. மேரிநிர்மலா. (1309

### திருமதி மோகனா சுந்தரமூர்த்தி

(வெள்ளியம்பதி, அளவெட்டி)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியில் வசித்தவரும், தற்போது கொழும்பு-6, லோறன்ஸ் றோட், வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமாகிய திருமதி மோகனா சுந்தரமூர்த்தி 26-06-2000 திங்கட்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் கொழும்பில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், மோகனின் (கனடா) அன்புத் தாயாரும், அபிராமியின் (கொழும்பு) மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அளவெட்டி. செ. சச்சிதானந்தம். (சி-577)

நல்லூர் ... யாழ்ப்பாணம்

யாழ் / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய முதல்வர்

உயர்திரு. சு. முத்துக்குமாரசுவாமி S. L. P. S. 2 : I அவர்களின்

# மணிவிழாவும் சேவை நலன்

# பாராட்டு விழாவும் சிறப்புமலர்

## ஆசிச் செய்தி

யா/ ஆவரங்கால் என்னும் சிறப்புப் பெற்ற கிராமத்தில் திலகம் போல் விளங்கும் யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் திரு. சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் கல்வி என்னும் கருத்தை ஆழமாக பதித்து பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும்பணி ஆற்றி இன்று அவர் இளைப்பாறுகின்றார் அவர் நீடூழி வாழ எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அடிபணிந்து வாழ்த்துகின்றோம்.

பிரம்மஸ்ரீ வே. நடராஜக் குருக்கள்
(பிரதிஷ்டா விற்பன்னர்)
ஆவரங்கால் சிவன் தேவஸ்தானம்.

## அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஒரு நிருவாகி

அகவை அறுபதைத் தொட்டு ஓய்வு பெற்றுச் செல்லும் யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் திரு. சு. முத்துக்குமாரசுவாமி அவர்களின் சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ..9 வருடங்கள் ஆசிரிய சேவையை நிறைவு செய்த திரு சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் 15 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றியிருக்கின்றார். அர்ப்

(6ம் பக்கம் பார்க்க)

## நல்ல உதாரண வித்தகர்

உயர்திரு சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் தமது அறுபதாவது வயதில் தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அவ்வேளையில் ஒரு வாழ்த்துக் கூற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதற்கிணங்க செயலாற்றிய கருமவீரர் எதையும் திருத்தமாகவும், செம்மையாகவும், செய்யும்செயல் திறன் கொண்டவர். தன்னுடைய எளிமையான

(6ம் பக்கம் பார்க்க)

## தெளிந்த நோக்குடைய சேவையாளன்

அர்ப்பணிப்போடு ஆசிரியத் தொழிலையும் பின்னர் அதிபர் தொழிலையும் ஆற்றியவர் எனப் பாடசாலைச் சமூகத்தாலும் சகபாடிகள், அதிகாரிகளாலும் மதிப்பிடப்பட்டவர் திருவாளர் சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள், தெளிந்த நோக்கும், உயரிய சிந்தனையும், தன்னலம் கருதாப் பணியும், அயராஉழைப்பும் அவருடன் ஒட்டிப்பிறந்தவை. 'எண்ணிய எண்ணியாங்கெய்துவர் எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்ற வள்ளுவன் வாக்கிற்கு நல்ல உதாரண புருசர் இவர் என்றால் மிகையாகாது. அத்தகைய திண்ணிய செயல்வீரனின் சேவை நயப்புமலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவரின் ஓய்வுகாலம்சிறப்பாக அமைய இறைவன் ஆசீர்வதிப்பானாக.

திரு. வே. பாலசுப்பிரமணியம்
தற்போதைய அதிபர்
யா/ஆ. ந. இ. வித்தியாலயம்

## சிறந்த வழிகாட்டி

கல்விச் சேவையில் அதிபர் சேவை அதிசிறப்பானது. அதிபர்கள் முன்னோடிகளாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்க வேண்டும். எமது அதிபர் திரு.சு. முத்துக்குமாரசுவாமி அந்தவகையில் அதி உயர்வானவர். தூங்காமை, கல்வி, அறிவுடைமை ஆகிய மூன்றும் பெற்றவர். எமது பாடசாலையின் வளர்ச்சியில் இவரது 10 ஆண்டு சேவைக்காலம் பொற்காலம். எமது அதிபர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர். எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் தனித்திறமை வாய்ந்தவர்.

(6ம் பக்கம் பார்க்க)

## 27 - 06 - 2000

### சேவை விபரம்:

வ. பறநட்டகல் அ.த.க பாடசாலை
28-10-1960 — 8-10-1961

★

க. கலகா ம. வித்தியாலயம்
09-10-1961 — 31-12-1961

★

யா. நல்லூர் ஆசிரியர் கலாசாலை
01-01-1962 — 31-12-1963

★

ப. சரஸ்வதி ம.வித்தியாலயம்.
01-01-1964 — 14-01-1968

★

கொ. புளூமென்டால் அ.த.க.பா.
15-01-1968 — 31-01-1969

★

கொ. பம்பலப்பிட்டி இ. கல்லூரி
01-02-1969 — 31-12-1971

★

யா. அச்சுவேலி ம. வித்தியாலயம்
ஆர. பி. அதிபர்,
01-02-1972 — 14-01-1975

★

வ. கனகராயன்குளம் ம. வி
ஆரம்பப் பிரிவு அதிபர்
15-01-1975 — 27-01-1976

★

யா. அச்சுவேலி. ம. வி
ஆரம்பப் பிரிவு அதிபர்
28-01-1976 — 19-03-1978

★

யா பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம
அதிபர்
20-03-1978 — 31-01-1982

★

யா, அச்சுவேலிமகா வித்தியாலயம்
ஆ. பி. அதிபர்
01-02-1982 — 11-05-1983

★

யா. வாதரவத்தை விக்னேஸ்வராவி
அதிபர்
12-05-1983 — 06-08-1990

★

யா. ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி
அதிபர்
07-08-1990 — 26-06-2000

★

## ஆளுமை நிறைந்த நிர்வாகி

வலிகிழக்கில் வளமான்மிக்க கிராமாகிய ஆவரங்காலில் அருளாட்சி செய்யும் நடராஜப் பெருமானின் அருகாமையில் அறிவுக்கண் திறக்கும் ஆலயமாக விளங்கும் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் அதிபராகக் கடந்த ஒரு சதாப்த்த காலம் கடமை ஆற்றித் தனது அறுபதாவது அகவையில் இனித்த சேவையை நிறைவு செய்யும் திரு. சு. முத்துக்குமாரசுவாமி அவர்களது சேவையைப் பாராட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் கல்விப்புலத்தைச் சார்ந்த நான் பெருமகிழ்வடைகின்றேன். ஆசிரியர்களது கற்பித்தலை மேற்பார்வை செய்ய இப்பாடசாலையைப்

(6ம் பக்கம் பார்க்க)

## துணிந்த தொழிற்சங்கவாதி

நீண்ட காலம் கல்விப்புலத்தின் தன்னலமற்ற சேவையாற்றி இன்று சேவையில் இருந்து திரு. சு. முத்துக்குமாரசுவாமி இளைப்பாறுகிறார். என்பதை என்னால் நம்ப முடியாதிருக்கின்றது. அவரது துடிப்பான பேச்சும், எதற்கும் துணிந்த தொழிற்சங்கவாதிக்கு இருக்கவேண்டிய தலைமையும் எந்த விடயத்தையும் ஆணித்தரமாக எடுத்துக் கூறும் அவரது வாதத்திறனும் அவருடன் சேர்ந்து இளைப்பாறப் போகின்றன. என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மிக மூத்த உறுப்பினர். பலவேறு

(6ம் பக்கம் பார்க்க)

## தன்னலம் கருதாத சேவையாளன்

அயராத உழைப்பும், விடாமுயற்சியும் தன்னலமில்லாத சேவை மனப்பான்மையும், நிர்வாகத் திறமையும் கொண்டமைந்த அதிபர் உயர்திரு சு. முத்துக்குமாரசுவாமிஅவர்கள் இப்பாடசாலையின் பௌதீக வளங்களை மேம்படுத்த அயராது உழைத்த உத்தமர். அவரது கண்டிப்பாலும், காருண்யத்தாலும் ஆசிரியர்களிடையே ஓர் ஐக்கியம், மாணவர்களிடையே ஊக்கம் அதன் விளைவுதான் நாம் இன்று காணும் பெறுபேறுகள்.

(6ம் பக்கம் பார்க்க)

## சிறந்த கூட்டுறவாளன்

அதிபர் திரு. சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் தமது 60வது அகவையில் ஓய்வு பெறும் வேளை இச்செய்தியைத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அதிபர் அவர்கள் எமது கூட்டுறவுச் சங்கத்தில் நெறியாளராக சுமார் 7ஆண்டுகள் கௌரவ சேவையாற்றியவர்.

தன்னலமற்ற சேவையால் ''கூட்டுறவு மக்களுக்கே'' என்ற உயர்வான இலட்சியத்துடன் செயற்பட்டவர். இவரது நேர்மை, அஞ்சாமை, கண்ணியம் கூட்டுறவுத் துறைக்கு அருந்துணையாக அமைந்

(6ம் பக்கம் பார்க்க)

## நல்லநோர்நாயகன் நம் அதிபர்

கல்வி உலகின் கலங்கரை விளக்கமாகத் திகழும் பல்வேறு அவலங்களும் நிறைந்த யாழ். மண்ணில் நகரங்களில் மட்டுமல்ல கிராமங்களிலும் புகழ் பூத்த பாடசாலைகள் கல்விப்பணி செய்கின்றன என்பதை கல்விஉலகிற்கு எடுத்துக்காட்டிய பெருமகன்.

பத்து ஆண்டுகாலமாக எமது பாடசாலைக்கு அதிபராக இருந்து அவர் செய்த சேவைகளும், தியாகங்களும் அளப்பரியன, அவர்களது சேவைக்காலம் எமது பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்

(6ம் பக்கம் பார்க்க)


## மணிவிழா நாயகனை வாழ்த்துவோர்

அன்புடன் ஆசிரியர்: திரு ச.குகன்

சி. கமலநாதன் ஆவரங்கால்.

ஸ்ரீ அம்பாள் தொலைத் தொடர்பகம் ஆவரங்கால்.

செல்வா சைக்கிள் வேகஸ் அவாங்கால்.

கண்ணகி அச்சகம் போட்டோஸ்ராற் அச்சுவேலி

தேவன் ஸ்ரோஸ் பலசரக்கு வியாபாரம் ஆவரங்கால்.

கே. செல்வரத்தினம் சமாதான நீதிபதி அச்சுவேலி

சோதி ரெக்ஸ் யாழ்ப்பாணம்.

நாகபூசனி பல்பொருள்வாணிபம் ஆவரங்கால்.

சிவா கிரைண்டிங் மில் ஆவரங்கால்.

வலி. கிழக்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம். அச்சுவேலி.

சோபிகா திரையரங்கு ஆவரங்கால்.

மணி ஸ்ரோஸ் ஆவரங்கால்.

## வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள பாலர் பாடசாலை ஆசிரியர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான

# திறந்த போட்டிப்பரீட்சை - 2000

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சி திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு கீழ் குறிப்பிட்ட தகைமையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2000-07-15 ஆகும்.

02. இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 14 ஆகும். இவ் வெற்றிடங்கள் போட்டிப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்தபோதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித்தீர்மானம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

3. சேவைக்கான நிபந்தனைகள்

I. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெற்றவர்கள் விதவைகள் அநாதைகள் / தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவித்தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்கள்.

II. இது ஒரு இடமாற்றச் சேவையாகும். சகல அலுவலர்களும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கடமைப்பட்டவர்களாவர்.

4. சம்பள அளவுத்திட்டம்

45,180 - 23 X 1,320 - 75,540 (T-1-4)
பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2/97 (III) இன்படி.

5. தகைமைகள்

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்நடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில், மாகாண சேவையில் இருப்பவர்களுக்கு உச்சவயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளையாவது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வசித்திருப்பதனை பின்வரும் ஆவணங்கள் மூலம் நிருபித்தல் வேண்டும்.

I. வாக்காளர் இடாப்பின் பிரதி

II. கிராம உத்தியோகத்தரிடமிருந்து பெற்ற வதிவிடச் சான்றிதழ்.

குறிப்பு:

வடக்கு-கிழக்கு மாகாணத்தினைப் பிறப்பிடமாகவோ அல்லது நிரந்தர வதிவிடமாகவோ கொண்டிருந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்து வேறு மாகாணங்களில் தற்காலிகமாக வசிப்போரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாகக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. இதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உ. கல்வித் தகைமைகள்

I. கல்விப் பொதுத் தராதர (சா/த) அல்லது சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் தமிழ் மொழி / சிங்கள மொழி, தூய கணிதம் / எண் கணிதம் / ஆரம்ப கணிதம், வர்த்தக கணிதம், ஆங்கிலம் உட்பட இருதடவைகளுக்கு மேற்படாது குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

II. தேசிய கல்விப் பொதுக்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் தமிழ் மொழி / சிங்கள மொழி, ஆங்கிலம், எண் கணிதம் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

III. முன் பாடசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் அரசாங்க நிறுவனமொன்றின் மூலமோ, அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிற்சி நிறுவனமொன்றின் மூலமோ வழங்கப்பட்ட பாலர் கல்வியும் சிறுவர் அபிவிருத்தியும் தொடர்பான சான்றிதழ் ஒன்றை அல்லது டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:

இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சையில் நிராகரிக்கப்படும்.

6. ஆட்சேர்ப்பு முறை:

எழுத்துப் பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபனக்கோவை விதிகள், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றிற்கு இணங்கவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7. எழுத்துப் பரீட்சை

எழுத்துப் பரீட்சை தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் நடாத்தப்படும் இவ்வெழுத்துப் பரீட்சை கீழே குறிப்பிடப்பட்ட இரண்டு (02) வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும்.

1. பொது உளச்சார்பு - ஒரு மணித்தியாலம் 100 புள்ளிகள்
2. பொது அறிவு (பாலர் கல்வி விடயங்கள் சம்பந்தமானவை) இரண்டு மணித்தியாலம் 100 புள்ளிகள்

8. நேர்முகப் பரீட்சையின்போது கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும் புள்ளிகள் இந்நேர்முகப்பரீட்சையில் வழங்கப்படமாட்டாது.

9. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/-ஐச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம் பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200/-ஐச் செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு-கிழக்கு மாகாணம் என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

10. விண்ணப்பிக்கும் முறை

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21 செ.மீ X 29 செ.மீ) தாளின் இருபக்கங்களையும் உபயோகித்து விண்ணப்ப படிவங்களை தயாரித்தல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள விபரங்களை அதன் முதற் பக்கத்திலும் எஞ்சிய விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு விண்ணப்பப்படிவத்தினை வடிவமைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2000-07-15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு கிழக்கு மாகாணம், இல. 35, மகிசா வீதி, உவர்மலை, திருகோணமலை, என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள பாலர் பாடசாலை ஆசிரியர் தரம் - II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சை - 2000" என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தத்தம் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவருடாக அனுப்புதல் வேண்டும். ஏனையோர் மாதிரி விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகள் தங்கள் கையொப்பங்களை உரியவர்கள் முன்னிலையில் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பூரணமற்றதும் உரிய தகைமைகளைக் கொண்டிராததும் குறித்த திகதிக்கு முன் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் எதுவித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரென காணப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்பு எக்கட்டத்திலும் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள், சான்றிதழ்கள் என்பவையில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையெனக் காணப்படின் அல்லது அப்பரீட்சார்த்தி எவையேனும் முக்கிய விடயங்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அப்பரீட்சார்த்தி தெரிவிலிருந்து அல்லது சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | — 1 | 6. திருகோணமலை | — 6 |
| 2. மன்னார் | — 2 | 7. மட்டக்களப்பு | — 7 |
| 3. வவுனியா | — 3 | 8. அம்பாறை | — 8 |
| 4. கிளிநொச்சி | — 4 | 9. கல்முனை | — 9 |
| 5. முல்லைத்தீவு | — 5 | | |

ஒரு நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் குறையுமிடத்து விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரத்திற்கு அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம்.

எவையேனும் இவற்றில் ஏற்பாடு செய்யப்படாத / குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாகவும், விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

க. சிவசிதம்பரம்
செயலாளர்

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

[illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சி திணைக்கள பாலர் பாடசாலை ஆசிரியர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான

# திறந்த போட்டிப்பரீட்சை - 2000

சுட்டெண் :

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் .
திரு/திருமதி/செல்வி:-
(1) தமிழில் / சிங்களத்தில்
(2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
(1) தமிழில் / சிங்களத்தில்:
(2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

03. தற்போதைய. நிரந்தர முகவரி:-
(1) தமிழில்/சிங்களத்தில்:
(2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

04. பால் ஆண் M / பெண் F

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:-
தமிழ் T சிங்களம் S

06 தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:-

(11வது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

07. இனம்:
சிங்களவர் — 1 இந்தியத்தமிழர் — 4
இலங்கைத்தமிழர் — 2 ஏனையவர் — 5
முஸ்லிம் — 3

08. நீங்கள் இலங்கைப் பிரசையாயின்.
வம்சாவளியாலா / பதிவு செய்யப்பட்டதாலா என்பதைக் குறிப்பிடுக

09. விவாகமானவர் / விவாகமாகாதவர்.

10. பிறந்த திகதி வருடம் மாதம் திகதி
2000.07 15 திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாட்கள்:

11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்,
(2) பிரதேச செயலாளர் பிரிவு:
(3) வதியும் காலஎல்லை தொடக்கம் வரை

12. தகைமைகள்

12. 1 கல்வித்தகைமைகள்
க. பொ. த. (சா/த) 1ஆம் அமர்வு ஆண்டு: சுட்டெண்:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க. பொ. த. (சா/த) 2 ஆம் அமர்வு ஆண்டு: சுட்டெண்:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1 | | 5. | |
| 2 | | 6 | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

12. 2 தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

12.3 விளம்பரத்தின் பந்தி 5 உ (III) இன் கீழ் தாங்கள் பெற்றுள்ள தகைமைகள்

| ஆண்டு | பரீட்சையின் பெயர் | சான்றிதழ்வழங்கிய நிறுவனம் | சித்தியின் தரம் |
|---|---|---|---|

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

14. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை என்று பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட............ பிரதேச செயலகத்தின்.........................ஆம் இலக்க ..........................ஆந்திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் காணப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எனது பரீட்சார்த்த தகைமையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கு நான் எனது இணக்கத்தை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி:
..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்த திரு/திருமதி/செல்வி......... .............................................. என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்பதையும் ......................ஆம் திகதி அவர் தனது கையொப்பத்தை எனக்கு முன்னிலையில் இட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:
..............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின்.
முழுப்பெயர்
பதவி

முகவரி. (பதவி முத்திரை)
(விண்ணப்பப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு படை தாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர். பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்தம் திரட்டிய வேதனமாக ரூபா 74,160/- ற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

16. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு மாத்திரம்)

மேற்படி விண்ணப்பதாரி வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் ..... ...... .........திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து .......... ..............மாகாணத்தில் வசித்து வருகிறார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:
..............................................
பிரதேச செயலாளர்/கிராமசேவகர் ஒப்பம்

பதவி
முகவரி,
(பதவி முத்திரை)

17. விண்ணப்பதாரர் அரசாங்கச் சேவையில்/மாகாண பொதுச்சேவையில் உள்ளவராயின் திணைக்களத்தலைவரின் விதப்புரை அல்லது

தற்போது கடமைபுரியும் நிறுவனத்தலைவரின் விதப்புரை:
திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதியுரை:

இத்திணைக்களத்தில் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி .............................................. என்பவரின் விண்ணப்பத்தை நான் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்பதையும் சகல வேதன ஏற்றங்களையும் உரிய காலத்தில் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:
..............................................
திணைக்களத்தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

## அர்ப்பணிப்புடன்

பணிப்புடன் சேவையாற்றிய இவரின் நிருவாகத்தின் கீழ் பாடசாலைகள் பௌதீகவளத்திலும், கல்வி அபிவிருத்தியிலும், சிறப்பான நிலையைப் பெற்றிருக்கின்றன. 10 வருடங்களில் இப்பாடசாலை அதிபராக விளங்கிய இவரது காலத்தின் பரீட்சைப் பெறுபேறுகளும் விளையாட்டுத்துறைச் சாதனைகளும் இவரின் அயராத உழைப்புக்குச் சான்று பகர்வன. திரு முத்துக்குமாரசுவாமியவர்கள் ஓய்வுகாலத்தில் சகலநலன்களும் பெற்று அவரும் அவரின் குடும்பத்தினரும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

திருமதி செ. மகாலிங்கம்
கல்விப்பணிப்பாளர்
யாழ். வலயம்.

## நல்லதோர்

காலம் பொறிக்கப்படவேண்டிய "பொற்காலம்".

கல்விச் செயற்பாட்டு அறை, விவசாய அலகு குழாய் நீர்விநியோகம், மின்சாரவசதி, கலையரங்கம், விளையாட்டு மைதானம், சுற்றுமதில் என யாழ். கல்விவலயப் பாடசாலைகளில் வளமும் வசதியும். சீரும் சிறப்பும் வாய்ந்ததாக எமது பாடசாலையை வளர்த்த பெருமைக்குரியவரும் இவரே.

கல்வி, கலை, விளையாட்டு என பல்துறைகளில் எமது மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள் என்றால் அவற்றிக்கெல்லாம் எமக்கு உறுதுணையாக இருந்து அன்பும் ஆதரவும் ஆலோசனைகளும் வழங்கிய எமது அதிபர் வாலிபப் பருவத்தைக் கடந்து விருத்தாப்பியமடைந்த போதும் ஓர் வாலிபனைப் போல கருமங்கள் ஆற்றுவதைக் கண்டு களித்து வியந்திருக்கிறோம்.

இத்தகைய பெருமகனது சேவையில் இருந்து ஓய்வு பெறுவது கல்வி உலகிற்கு பேரிழப்பாக அமையாமல் என்றென்றும் எமக்கு ஆதரவாக இருப்பார் என்ற நம்பிக்கையோடு நீண்ட வாழ்நாளும், நிறைந்த ஆரோக்கியமும் கொண்டு வாழ இந்நாளில் வாழ்த்து நிற்கின்றோம்

"வளர்க கல்வி வாழ்க அவர் புகழ்"

ஆசிரியர் கழகம்.



**YARLHALL கல்வி நிலையம்**

93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

வகுப்புகள் யாவும் வழமையான நேர அட்டவணைப்படி 30-06-2K வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

(1315)


## நீங்காத நினைவுகளில் ஓராண்டு



மண்ணக வாழ்வில் 10-06-1919 — இறைமகிமைக்குள் 08-07-1999

திதி: 27.6.2000

அமரர்

## சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் சோமாஸ்கந்த குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு கொத்துக்குளம் மாரியம்மன் தேவஸ்தானம் ஊறணி, மட்டக்களப்பு)

உருண்டதோ ஒரு வருடம்
அப்பா என்றழைத்து ஆண்டொன்று ஆனதோ
மறையவில்லை எமகவலை
அப்பாவின் நிழல் எப்போதும் நிலைத்திருக்கும்
என்றிருந்தோம்
தப்பாகிப் போனதே நினைவு-கனவாகிப் போனதே
மூத்த மகன் விண்ணேகி ஆண்டொன்று ஆகுமுன்
அவர் தன் பாதையில்
தாங்களும் சென்ற மாயம் தான் என்னவோ?
மறைந்த மாயம் தான் என்னவோ.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தீயினில்
வெந்திடும் நாள் வரை
உங்கள் திருமுகம் என்றும் எம் நெஞ்சை விட்டு
அகலாது
உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி: சிவபாக்கியம்
மகன்: சிவஸ்ரீ. சோ. ஜெபாலசுந்தரக்குருக்கள்.
மற்றும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கஜானன் தொலைத் தொடர்பகம்,
புற்றாளை பிள்ளையார் கோவிலடி,
புலோலி தெற்கு, புலோலி.

[1251]

## பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தான வருடாந்த பொங்கல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2,மணிக்கு நடைபெறும். (சு)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகுகண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

வரும்மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் இடம் பெறும். (உ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சிவன்கோவில் தேவஸ்தானத்தில் இம்மாதம் 28ஆம்திகதி முதல், வரும் மாதம் 7ஆம்திகதிவரை நடைபெறவிருக்கும் மஹோற்சவ காலத்தின் போது, தென்மராட்சி மக்களின் நலன் வேண்டி விசேட பூசைவழிபாடுகள் இடம்பெறவுள்ளது. (உ)

★ ★ ★

தென்துன்னை ஸ்ரீ பூகேஸ்வரர் வருடாந்தவலய அலங்கார உற்சவம் நாளை புதன் ஆரம்பமாகி 7வதுநாள் பூங்காவனமும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி தீர்த்தஉற்சவமும் நடைபெறும். (க-03)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

அராலி வண்ணப்புரம்ஸ்ரீ விசாலாட்சி அம்பாள சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் இம்மாதம் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (சு)

## ஆரம்பக் கல்வி நெறிக்கு 120பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு ஆசிரியப்பயிற்சியை மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக்கல்வி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட 120 பேரின் பெயர்ப் பட்டியல்களை கலாசாலையில் வந்து பார்வையிட்டு தமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (உ)

## மா விநியோகம்

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பல.நோ.கூ.சங்கஎல்லைக்குட்பட்ட பகுதிகளில்உணவுப் பொருட்களை உற்பத்தி செய்துநாளாந்தஜீவனோபாயத்தினை மேற்கொண்டுவருவோருக்கு கட்டுப்பாட்டு முறையில் மா வழங்கப்பட்டு வருவதாகச் சங்கத்தின்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார். (சி-23)


**விற்பனைக்கு உண்டு**

லேத்மிசின் 10 Kg டைனமோவுடன் எஞ்சின் மற்றும் வெல்டிங் உபகரணம் விற்பனைக்கு உண்டு. புதன் ஐமை நேரில்தொடர்பு கொள்ளவும்.

ஐ. கந்தராசா,
மெக்கானிக்கர்,
முருகன் கோயிலடி,
பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(இ/ 565)


## துணிந்த

மாவட்டங்களில் பலதரப்பட்ட பதவிகளை அலங்கரித்தவர். நீண்டகாலம் கோப்பாய்க் கிளையின் செயலாளராகவும், ஆட்சிக்குழுவின் அனுபவம் மிக்க உறுப்பினராகவும் இருந்து சங்கத்திற்கு பெருமை தேடித்தந்த ஒருவர். அவர் அதிபராக இருந்த பாடசாலைகள் பலவேறு துறைகளில் துரித வளர்ச்சி பெற்று, மாவட்ட நிலையிலும் மதநிலையில் இருந்த மையை யாவரும் ஏற்றுக்கொள்வர். சாதனையாளரான இவர் இளைப்பாறுவது சங்கத்திற்கு மாத்திரமல்ல கல்வித்துறைக்கும் பேரிழப்பாகும். அதிபர்கள், ஆசிரியர்களின் நலனுக்காக சங்கம் நடாத்திய வரலாறு ரீதியாக பல போராட்டங்களில் அவர் தொழிற்சங்கவாதியாக அவர் செயற்பட்டமையை ஆசிரிய சமூகம் என்றும் மறவாது என்பது எனது அசையாத நம்பிக்கை ஆகும். அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் இளமசமுதாயத்தினருக்கு அவரின் பணி முன் உதாரணமாக அமைய வேண்டும்.

"ஒற்றுமையே பலம்"

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்
இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்

## சிறந்த

தலைமை குறிப்பிடத்தக்கது.

இவரது கலைச்சேவையும் பொன்எழுத்துக்களால் பொறிக்க வேண்டியவை. இவருக்கு நிகர் இவரே. இவரது அருஞ்சேவையைப் பாராட்டுவதோடு, ஓய்வின் பின்பு நலம் பெற இறைவன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

வலிகிழக்கு வடபகுதி
ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி.
பணிப்பாளர்களும், பணியாளர்களும்.

## தன்னலம்

பரீட்சையிலும் சரி, ஏனைய கல்வி சார் முயற்சிகளிலும் சரி நகர்ப்புறப் பாடசாலைகளிற்கு ஈடாக பெறுபேறுகளைப் பெற்று மாணவமணிகள் முன் நிற்பதைக் கண்டு கல்விச்சமூகம் வியந்து நிற்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளாக இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி, பெற்றோர்கள் மத்தியில பெருமதிப்பைப் பெற்று ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் சகல நலன்களுடனும், சமூகவாழ்வில் மேலும் சிறப்புப்பெற எல்லாம் வல்ல இறைவனின் ஆசி கிடைக்கவேண்டி இறைஞ்சும்,

தி. பாஸ்கரமகாராஜா
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ ஆ.ந.இ. வித்தியாலயம்.

## சிறந்த வழிகாட்டி

கல்விச் சேவையில 39 வருடங்கள் தம்மை ஈடுபடுத்திய இவரது ஓய்வு காலத்தில இவர் நலம் பெற்று வாழ எல்லாமவல்ல பார்வதிவர்த்தினி சமேத நடராஜ சுவாமியைப் பிரார்த்திக்கிறோம்.

து. சிவராஜா — தலைவர்.
நீ. மயில்வாகனம் — செயலாளர்.
பழைய மாணவர் சங்கம்.

## நல்ல

தோற்றத்துடன் அன்பும் பண்பும் அடக்கமும் ஒருங்கே வரப்பெற்றவர். தனது 39 வருட சேவைக் காலத்தில் ஆசிரியராக, தொழிற்சங்க உறுப்பினராக, அதிபராக சேவையாற்றி பலவேறு அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர் குழாத்தினைக் கண்டவர் அவர்கட்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொண்டு சகலருடனும் அன்புடன் பழகித் தன் சேவையின் முழுப்பலனையும் கல்வி உலகிற்கே ஈந்தவர்.

யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் தனது உச்ச சேவையைச் செய்து வரலாறு காணும் சாதனையாளராக ஓய்வு பெறுகின்றார்.

இத்தருணத்தில் தமது சேவைக்காலத்தினை நிறைவுடன் பூர்த்தி செய்து தன் கடமையில் இருந்து ஓய்வு பெறும் திரு சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் நீடித்த ஆயுளுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும் என மனமார வாழ்த்தி நிற்கின்றேன்.

இ. சிவஞானசுந்தரம்
உதவிக் கல்விப்பணிப்பாளர்
கோப்பாய்க் கோட்டம்

## ஆளுமை

பலமுறை தரிசித்திருக்கிறேன். அவ்வேளைகளில் எல்லாம் இப்பாடசாலை கண்ட வளர்ச்சியை எண்ணிப் பார்க்கின்றேன். புதிதாக விளையாட்டு மைதானம், நூலகம், செயற்பாட்டறை, ஆய்வு கூடம், நீர் மலசலகூட வசதிகள் எனப் பௌதிக வளம் தனில் நிறைவு பெற்ற நிலை மறுபுறம் சிறப்பான க. பொ. த (சா/த) தேர்வுப் பெறுபேறு, புலமைப்பரிசில் முடிவுகள். இத்தகைய துரித வளர்ச்சியில் துணை நின்றோர் அநேகர். ஆனால் அதற்குத் தூண்டு கோலாக அமைந்த அதிபர் அவர்களது ஆளுமையைத் தனிப்பட்ட முறையிலும் நானறிவேன். சிறந்த கூட்டுறவாளராய், ஆசிரியர், தொழிற்சங்கப் பிரதிநிதியாய் தடம் பதித்து இன்று இப் பள்ளியில் தான் சிறந்த நிர்வாகி என்பதையும் வெளிக்காட்டியுள்ளார், திரு. சு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் தமது நிறைவான கல்விச் சேவையைத் தொடர்ந்து பல சிறப்புக்களையும் பெற்றுக் குடும்பத்துடன் இனிதே வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராகுக.

பேராசிரியர் க. சின்னத்தம்பி
தலைவர்
கல்வியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணம்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின் அல்லது"
குறள்

# வலம்புரி

## மறுமலர்ச்சி

சோல் பரிப்பிரபு இலங்கையின் சுதந்திர சதுக்கத்தின் சாவியை பெரும்பான்மை இனத்தவர்களிடம் கையளித்து விட்டுத் தமிழ் மக்களை தாழ்வாரத்தில் விட்டுச் சென்றுள்ளார். அன்றைய தமிழ்ப் பெருந் தலைவர்களும் அந்த நிலையைச் சிரந் தாழ்த்தி கரம் கூப்பி ஏற்றுக் கொண்டனர். சதுக்கத்தில் இருந்து இன்னிப்போடும் தர்மத்தில் காலச்சக்கரம் சுழன்டியது தன் மானம் மிக்க தமிழ் மக்கள் இந் நிலை தாளாது வெகுண்டெழுந்தனர். அதுவே இன் ஒலிக்கும் போர்முரசம்.

நாடு புயலாய் பிரளயமாய், பூகம்பமாய் திருப்வேளையில் கலையிலே மாற்றமும், மறுமலர்ச்சியும் காணப்படுகிறது. கலையினூடு பிறக்கும் உணர்வலைகள் எரிமலையாய் கந்தகத்தை அள்ளி வீசிக் கொண்டிருக்கின்றன. சுலோகங்களில், கவிதைகளில், கதைகளில் நாடகங்களில் எமது வெம்மை வெளிக்கொண்டுரைப்படுகிறது சுவர்களில் எழுதப்படும் சுலோகங்களும், ஊர்வலங்களில் சொல்லப்படும் சுலோகங்களும் போராட்டவரலாற்றை அணி செய்வன அவை அழியாது காப்பாற்றப்படவேண்டியவை.

காலம் காலமாக எமது மேடைகளில் ஒலித்த கவிதைகளை விட இன்று மேடைகளில் ஒலிக்கும் கவிதைகளில் தேனுண்டு துடிப்புண்டு மக்களைத் தூண்டும் திராணி உண்டு சந்திகளில் மேடையமைத்து தேனான கவிதைகள் பரவும்வகை செய்தல் வேண்டும்.

தெருக்கூத்து, புரவியாட்டம், கோலாட்டம், கும்மி அனைத்தும் எமது பாரம்பரிய கலைகள் அவை இன்று புதுப்பொலிவுடன் எமது சமகாலப் பிரச்சினைகளை எடுத்தியம்பும்போது எமது மனதுக்கு ஒரு நிறைவு தருகின்றன. கலை கண்ணுக்கு இனிமை தரும் அலங்கார விளக்கல்ல; அது மக்களின் ஈடேற்றத்திற்கு ஒளி பரப்பும் கலங்கரை விளக்கம்.

இவ்வாறு உள்ளத்தைப் பிடித்து உணர்வைக் கொடுத்து, காலவெள்ளத்தே மக்களை இளமை முறுக்கேறிய காளைபோல் திமிற வைத்தது. வேங்கை போல் முன்னே பாயும் முனைப்பைக் கொடுத்தது. அந்த உத்வேக உணர்வில் அழுந்திய உரிமைப் போராட்டம் மலர்ச்சியைக் காண விழைகிறது. மக்கள் அயர்ச்சி இன்றி இனி உயர்ச்சி அடைய வேண்டும். புரியாமைப் பேயின் உபத்திரவம் தொலையட்டும்.

வலம்புரி ஆசிரியர்

★ பாதாள உலகக்கும்பலை

# தேடிக்கண்டு பிடிப்பதில்; கொழும்பில் புதிய நடைமுறைகள் அறிமுகம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கி வரும் பாதாள உலகக் கும்பலைச்சேர்ந்தவர்களைக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவதற்கான புதிய நடைமுறையைப் புகுத்தியிருப்பதாக பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

கொழும்பின் அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்கும் பாதாள உலகக் கும்பலை கண்டுபிடிப்பதில் தற்போது தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மனம் வைத்துச் செயற்பட்டால் இக்கும்பலைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் சொற்ப காலத்திலேயே கைது செய்ய முடியும்.

சமீபகாலமாக இவர்களது குற்றச் செயல்கள் கொழும்பில் அதிகரித்துள்ளன. கொழும்பின் அமைதியைச் சீர்குலைப்பதில் முக்கிய பங்கு இக்கும்பலுக்கு உரியதென வும் குறிப்பிட்டார்.

இதேசமயம், கொலை கொள்ளை ஆகியவற்றுடன் தொடர்புடைய இக்கும்பலைச்சேர்ந்த நீண்டகால உறுப்பினர்கள் பலரது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# திருமண வைபவத்தில் நிகழ்ந்த கொடூரம் இரு இளைஞர்கள் வெட்டிக் கொலை

(கொழும்பு)

மத்தளைப்பகுதியில் இரு இளைஞர்கள் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த இந்த இரு இளைஞர்களும் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு வீடொன்றினில் வைத்து கொடூரமான முறையில் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் கொலைச்சம்பவத்தை நேரில் பார்த்த நபர் ஒருவரும் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தம்பளைப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பழைய பகைமையே இந்த இரட்டைக் கொலைக்கு காரணம் என்றும் இது தொடர்பாக எட்டு சந்தேக நபர்களை தேடிவருவதாகவும் வத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி" பிரேம லால்ரணகெல' தெரிவித்துள்ளார்

(சி-4)

# கொலைக்குக் கொலை; செட்டிகுளம் பகுதியில் நிகழ்ந்த திகில் சம்பவம்

(வவுனியா)

செட்டிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் நபர் ஒருவர் பொதுமக்களால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சிலதினங்களுக்கு முன்பு வயோதிபவிவசாயிகள் இருவரை கத்தியால் குத்திப் படுகொலை செய்ததாலேயே மேற்படி நபருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

# மொறட்டுவ மாணவர் இருவர் தொடர்ந்தும் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இரத்மலானைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் இருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் பயங்கரவாதப்புலனாய்வுப் பிரிவினராலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(வ)


## வாழ்த்துகின்றோம்

சேவையைத் தனது உயிர் மூச்சாகக் கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த எமது மதிப்பிற்குரிய

அதிபர் உயர்திரு முத்துக்குமார சுவாமி

அவர்கள் 27-06-2000 ஆகிய இன்று மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் இந்நாளில் பல்லாண்டு வாழ்க என உளங்குளிர வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.

(1297)

## அறிவித்தல்

மீண்டும் சுன்னாகத்தில்

சிங்கர் கொம்ளெக்ஸ்

என்னும் ஸ்தாபனம் இயங்குகின்றது.

எம்மிடம்:-

★ கறுப்பு, வெள்ளை தையல் இயந்திரங்கள், உதிரிப் பாகங்களையும் எம்மிடம் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

★ சகல விதமான தையல் இயந்திரங்களும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சிங்கர் கொம்ளெக்ஸ்
மத்திய பேருந்து நிலையத்துக்கு அருகாமை,
சுன்னாகம்.

(1262)

ஓம் சக்தி
திருநெல்வேலி

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் -2000

கொடியேற்றம்
28-6-2000 புதன் காலை 10.00 மணி
(பழையநேரம்)

தேர் உற்சவம்
06-07-2000 வியாழன் காலை 8. 00

தீர்த்தத்திருவிழா
07-07-2000 வெள்ளி காலை 9. 00 மணி

தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு:
நரேஷ் வீடியோ
140, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(வி/574)

தென்மராட்சி மக்களுக்காக இறையருள் வேண்டி

## பிரார்த்தனை

## சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர்

தேவஸ்தானத்தில் 28. 06. 2000 முதல் 07-07-2000 வரை நிகழ்வுறும் மஹோற்சவத்தின் போது, தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து துயருறும் மக்களின் நலன் வேண்டியும், மீளவும் தங்கள் இடங்களுக்குச் செல்வதற்காகவும் வேண்டி விஷேட பூஜை, பிரார்த்தனை, வழிபாடுகள் நிகழ்வுறவுள்ளது இந் நிகழ்வுகள் சாவகச்சேரி சிவன்தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ க. ஜெகதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்

"தமிழ் மக்கள் சேமத்திற்காக அனைவரும் கலந்து கொண்டு பிரார்த்திப்போமாக."

(1289) தேவஸ்தானம்.

## இந்து நாகரிக விரிவுரைகள்

இதுவரை தடைப்பட்டிருந்த எனது

## இந்து நாகரிக விரிவுரைகள் மீண்டும்

01-07-2000 ல் இருந்து வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என்பதனையும் மேலதிக விரிவுரைகளுக்கான நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும் படியும் மாணவர்களுக்கு அறியத் தருகின்றேன.

S அருள் நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்

[1306]

## வாழ்த்துகின்றோம்

யா/ ஆவரங்கால்

நடராஜ இராமலிங்க வித்தியாலய முதல்வர்

உயர்திரு. சு. முத்துக்குமாரசுவாமி

அவர்கள் 27-06-2000 ல் 60 வது வயதைப் பூர்த்திசெய்து மணிவிழாக்காணும் இன்றைய தினத்தில் அவரை மனமார வாழ்த்துவதில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பெருமகிழ்வெய்துகிறது.

எமது பாடசாலையில் பத்து ஆண்டுகள் அரும்பணியாற்றி பாடசாலையின் புகழுக்கு வழிவகுத்த அவர்களின் சேவையை நன்றியோடு நினைவு கூர்ந்து பாடசாலைச்சமூகம் அவரைப் போற்றுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
ஆ. ந. இ. வித்தியாலயம்.
ஆவரங்கால்.

(1295)

## St. John's College & Chundikuli Girl's College

Jaffna.

(1)

இரு பாடசாலைகளினதும், அனைத்து வகுப்புகளும் 03-07-2000 திங்கட்கிழமை தொடக்கம் காலை 9-00 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரியில் இயங்கும்

(2)

இருகல்லூரிகளினதும் G. C. E [A/L] மாணவர்களுக்கான தொண்டைமானாறு வெளிக்களப் பரீட்சை 29-06-2000 முதல் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்:

அதிபர்கள்

(1302)

### இடைக்கால .

சிங்களவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகாவும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இப்பேச்சு வார்த்தையின் போது இடைக்கால நிர்வாக சபையின் கட்டமைப்பு, அதிகார வரையறை, தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### கனகரத்தினம்.ம.ம.வி யாழ். இந்துவில்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் தொடர்ந்தும் யாழ். இந்துக் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்குகிறதெனவும், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் தவறாது சமுகம் கொடுக்க வேண்டுமெனவும் அதிபர் வி. மாணிக்கம் தெரிவித்துள்ளார். (ந)

### கொழும்பில்...

ருந்து கல்கிசையை அண்டிய பகுதிகள் தொடர்ந்தும் தேடுதலுக்குள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தவேளை கடந்த சனிக்கிழமை கொட்டாஞ்சேனை, ஆமர்வீதி, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் 46 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

### உணவுப -

யாத்தகைச் சங்கப்பிரமுகர்களும் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் யாழ்ப்பாணம் வந்த கப்பல் தாக்கப்பட்டமை அடுத்து யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது; அரச அதிபர் செயலகத் துடனும் துறைமுக அதிகாரிகள் வர்த்தக வட்டாரங்களுடனும் தொடர்பு கொண்ட போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### கப்பலின்...

மோதலையில் இப்பிங் கொம்பனிக்கு சொந்தமான "மெர்ச உதவி" கப்பல் எரிந்துகொண்டிருப்பதாகவும் அதனை மீட்பதற்குரிய நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (வ)

### செய்மதி...

விகளையில் செய்மதிமூலமான தொலைபேசி அழைப்புகள் வேலை செய்ய ஆரம்பித்ததும் அழைப்புகளை பெறுவதில் உள்ள தடங்கல் குறையும் என்றும்:

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியிடங்களுக்கு தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு பதிவு செய்யும் போது அவ் அழைப்புகள் கிடைப்பதற்கான நேரம் முன்பே அறிவிக்கப்படும் என்றும்: தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் செய்மதி மூலமான தொடர்பு சேவை செய்ய ஆரம்பித்ததும் பகலில் சுமார் 600 அழைப்புகளும், இரவில் 300 அழைப்புகளும் பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும்; சர்வதேச அழைப்புக்களைப் பொறுத்தவரை இரு வழித் தொடர்புகள் ஏற்படுத்தப்படும். எனினும் வெளிநாட்டிலிருந்து தொடர்பை ஏற்படுத்துவது சுலபமானது எனவும் குறிப்பிட்டார்.

### உதவ.-

காணவில்லை என்றும் 21 பேர் மீட்கப்பட்டதாகவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்ததுடன் தீ அணைக்கப்பட்டு கப்பல் காங்கேசன் துறைக்கு இழுத்துச் செல்லப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதே வேளை ஆயுதம் ஏற்றிவந்ததால் இக் கப்பலை தாங்கள் தாக்கி அழித்ததாகவும், இதில் ஆறு கடற்கரும்புலிகள் உயிரிழந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (வ)

### ஜனாதிபதி ...

வி. கே ஜெயன், எஸ். தவராஜா, ஆலோசகர் டாக்டர் விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்வரும் விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டு உடன் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

● எரிபொருள் விநியோகத்தை சீராக்க மேலும் பவுசர்களை உடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தல்
● நிவாரணக் கொடுப்பனவை அதிகப்படுத்தவும் அதனை தட்டுப்பாடின்றி வழங்குதல்
● இடம்பெயர்ந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்குதல்
● இ.போ.ச. சபைக்கு மேலதிகமாக பஸ் வழங்குதல்
● மருந்துப் பொருள், மின்சாரம் போன்ற வசதிகளை வழங்குதல்

### முக்கிய ...

பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இத்தாக்குதலை திட்டமிட்டு நடத்திய பிரதான சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படும் நபரைக் கைது செய்வதற்கு விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ)

### ரத்ததானம் .

மனையாவிட்ட டங்களுக்குச் செல்லும் பலகலைக்கழக மாணவர்களை இரத்ததானம் வழங்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி கேட்டுள்ளார். (ந)

## மரண அறிவித்தல்கள்

### சந்தையா துரைசிங்கம்

கிட்டங்கி ஒழுங்கை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும், கிராண்ட்பாஸை வதிவிடமாகவும் கொண்ட சந்தையா துரைசிங்கம் 24.06.2000 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தையா தங்கமுத்து தம்பதிகளின் மகனும், அச்சுவேலியூர் ஆறுமுகம் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாசனியின் அன்புக் கணவரும் கலாதேவன், கலாவதலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரேக்கா, மதுரிகாவின் அன்பு மாமனாரும், செல்வந்தியின் ஆசைப்பேரனும், சிவலிங்கம், அருளிங்கம், சரஸ்வதி, இராஜேஸ்வரி, அரசலிங்கம், மங்களேஸ்வரி, புவனேஸ்வரியின் அன்புச்சகோதரரும், இராசமணி, டெய்சி, காலஞ்சென்ற தங்கராசா, தேவி சிவபாதசுந்தரம், கந்தசாமி ஆகியோரின் துமம், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, தம்பிராசா, லோகேஸ்வரன் மற்றும் சந்திரவதனா, பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 632, பிறின்ஸ் ஒவ் வெல்ஸ் அவனியு கிராண்ட்பாஸிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி இந்து மயானத்தில் 26.06.2000 அன்று தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய்மத்தி,
கோப்பாய்.

தகவல்
இராசையா
சந்திரவதனா

(1298)

### இராமு பொன்னம்மா

தனங்களப்பைச் சொந்த இடமாகவும் புற்றளை பிள்ளையார் கோவிலடி, புலோலி தெற்கு, புலோலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராமு பொன்னம்மா 26.06.2000 நேற்று திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமுவின் அன்பு மனைவியும், அலவலட்சுமியின் அன்புத் தாயாரும், தியாகராசா, சின்னத்தம்பி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நா. இராசம்மாவின் சகோதரியும், கோடீஸ்வரன் (கனடா), இராசேஸ்வரி, விக்னேஸ்வரன், திருச்செல்வி, திருச்செல்வம், நடராசா, சங்கரலிங்கம் ஆகியோரின் பேர்த்தியும், ஜனார்த்தன், ஜனார்த்தனி, அர்த்தனி ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.06.2000 காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலை வழுதான மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
தி. விக்னேஸ்வரன்
(பேரன்)

தற்போதைய முகவரி:
சி. தியாகராசா
மே/பா. ச. கணபதிப்பிள்ளை
புற்றளை பிள்ளையார் கோவிலடி,
புலோலி தெற்கு, புலோலி.

(1316)

### பொன்னையா செல்லையா

பொன்னையா செல்லையா (ஓய்வு பெற்ற ஆசிரியர் சித்திவிநாயகர் பாடசாலை பருத்தித்துறை) காலமானார். அன்னார் பொன்னையா இலக்குமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், ஆனந்தன் (கனடா), வசந்தன் (கொலண்ட்), வசீகரன் (ஆசிரியர் விக்னேஸ்வராகல்லூரி கரவெட்டி), வாசுதேவன் (கனடா), குமுதினி, காலஞ்சென்ற நடராஜா, ஸ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராணி (கனடா), நந்தினி (கொலண்ட்), ரஜனி, கீதாஞ்சலி (கனடா), கெங்காதரன் (ஆசிரியர் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை) ஆகியோரின் மாமனாரும், கனடாவில் வசிக்கும் பேர்த்திமார்களான வாசுகி, வனஜா, தேவகி, சாந்தி, அஞ்சலி, துளசி, கொலண்டில் வசிக்கும் சஞ்சயன், செல்வ. தினேஸ்கரன், கௌதமி, சுகன்யா, கீர்த்திகா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (27.06.2000) மாலை பருத்தித்துறை போரி மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
செ. வசீகரன்
(மகன்)

3 ஆம் குறுக்குத் தெரு
பருத்தித்துறை

(சி-578)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த
இனிய பாடல்கள் நிறைந்த
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
(நீலஸ்)
11.00, 2.30 [பு.நே]
(இ/462)

**ஸ்ரீசெல்வா**
யாழ்ப்பாணம்
கார்த்திக் மந்த்ரா நடித்த
**கண்ணன் வருவான்**
[வெட்டுப்படாத பாடல் காட்சியுடன் பிரமிட் CD பிரதி
10.30, 2.00 [ப.நே]
(இ-499)

**'ராஜா'**
யாழ்ப்பாணம்
விஜய், மந்த்ரா ரகுவரன் சுபலக்ஷ்மி நடித்த
**லவ் டுடே**
புதியநேரம் 10-30 - 2-00
[இ/555]

**லக்ஷ்மி**
இணுவில்
பிரசாந் தேவயாணி
**அப்பு**
(புதிய வெளியீடு)
10.30, 2.30 [ப.நே]
(இ/563)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. திருநாவுக்கரசு உதயசூரியன்

(சமாதான நீதிவான்) அவர்கள்

(அரச அனுமதிபெற்ற மொழிபெயர்ப்பாளர்)

★ இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், தொல்புரம் கிழக்கு அலகு, தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையம், சங்கானை ப. நோ. கூ. சங்கக் கிளைக்குழு 15, தொல்புரம் துறையன் வளவு ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும்,

★ இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வலிமேற்குப் பிரிவு, தொல்புரம்—மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கம், COMTEC, சுதுமலை ஆகியவற்றின் உப தலைவராகவும்,

★ தொல்புரம்—வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான தொண்டர் சபை, யாழ்/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், விலைமதிப்பீட்டுத் திணைக்களம், நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் செயலாளராகவும்,

★ தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலனசபையின் உப-செயலாளராகவும்,

★ இலங்கை செ. சி. சங்கம், யாழ். மாவட்டக் கிளையின் பொருளாளராகவும்,

★ தொல்புரம் மடத்துப்பிள்ளையார் — சுப்பிரமணியர் கோவில் பரிபாலனசபை, அதன் தர்மகர்த்தா சபை, விலைமதிப்பீட்டுத் திணைக்களம், யாழ்ப்பாணம் இந்து மன்றம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினரும்,

★ தொல்புரம் மடத்துப்பிள்ளையார் — சுப்பிரமணியர் கோவில் அன்னதான சபை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆகியவற்றின் கணக்காய்வாளரும்.

★ சங்கானை ப. நோ. கூ. சங்க பொதுச்சபை உறுப்பினரும், ஆளணிஉபகுழுஉறுப்பினரும்

★ Complimentary Member - National Green Cross, Sri - Lanka.

ஆகிய நிறுவனங்களில் தன்னலம் கருதாது சிறந்த சேவையாற்றிவரும் திரு தி. உதயசூரியன் அவர்கள் நீதி, அரசியல் அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை இட்டுமகிழ்ச்சியடைவதுடன் பாராட்டி அவரது சேவைகள் மக்களுக்கு மேன்மேலும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

சக சமூகசேவையாளர். நண்பர்கள்
அராலி வட்டுக்கோட்டை,
சங்கானை, சுழிபுரம்.

[1310]

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.